**OS.No.188/2024, Dated 08.11.2024**

The witness sworn under Oaths Act 1969 on this the 8th day of November 2024

**வா.சா.1 - பட்டாபிராமன் த/பெ சேஷரத்தினம் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

எனது பூர்வீக ஊர் செப்டாங்குளம் ஆகும். நான் தற்போது தாழம்பள்ளத்தில் வசிக்கிறேன். எனது மனைவி காமாட்சிக்கு சொந்த ஊர் மேலத்தாங்கல் ஆகும். கடந்த 28.07.2011 தேதியன்று நான் எனது மனைவி தனபாலிடம் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தில் கதவு எண் 7 நாதமுனி தெரு வந்தவாசி என்று பொய்யாக முகவரி குறிப்பிட்டு கிரையம் வாங்கினோம் என்றால் நாங்கள் பல வருடங்கள் வந்தவாசியில் குடியிருந்தோம். அந்த கிரைய பத்திரததில் யார் சாட்சி கையொப்பம் இட்டார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. தனபாலுக்கு 3 மகன்கள் அவர்கள் சுந்தரம், சின்னராஜ் மற்றும் குணசேகரன் ஆவர். தனபால் என்னிடம் டிராக்டர் வாங்குவதற்கு கடன் கேட்டபோது அவருடன் யார் வந்தார்கள் என்றால் அவருடைய மகன்கள் சுந்தரமும்; குணசேகரனும் வந்தார்கள். சுந்தரமும் குணசேகரனும் ரூ.2,00,000/- கடனை வாங்கி சென்ற போது நான் அவர்களிடம் இருந்து எந்த ஆவணமும் எழுதி வாங்கவில்லை. சுந்தரமும் குணசேகரனும் ரூ. 2,00,000/- கடன் வாங்கி சென்ற பின்னிட்டு அந்த பணத்திற்கு பின்னிட்டு பாண்டு ஏதாவது எழுதி கொடுத்தார்களா என்றால் இல்லை. எனக்கும் குணசேகரனுக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்து வந்ததா என்றால் இருந்து வந்தது. நான் குணசேகரனுக்கு ரூ. 4,50,000/- கொடுத்துள்ளேன். குணசேகரனும் தனியாக பாண்டு எழுதிக்கொடுத்துள்ளார். 2ம் பிரதிவாதி 09.09.2019 அன்று ரூ. 3,00,000/-திற்கும் 10.12.2019 அன்று ரூ. 2,00,000/- ற்கு கடனுறுதி சீட்டுகள் எழுதி கொடுத்தார்கள். எனக்கும் தனபாலுக்கும் தான் கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றாலும் எனக்கும் சுந்தரத்திற்கும் கொடுக்கல் வாங்கல் இல்லை என்றாலும் சரிதான். தனபால் தனது சொத்துகளை தனது 3 மகன்களுக்கும் எழுதி கொடுத்துள்ளார். தனபால் தனக்கு சொந்தமான சொத்துகளை குணசேகரனுக்கும் சின்னராஜ்க்கு மட்டும் தான் எழுதி கொடுத்தர் என்றாலும் சுந்தரத்திற்கு எந்த சொத்தும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சுந்தரம் தனக்கு தனபால் எவ்வித சொத்தும் எழுதிவைக்கவில்லை என்றாலும் சுந்தரம் பொது கடனான ரூ. 2,00,000/- எனது மனைவியிடம் திருப்பி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. சுந்தரம் எனது மனைவியிடம் ரூ. 2,00,000/- கொடுத்தது எனக்கு தெரியும் என்றாலும் அதை தெரிந்து கொண்டே பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தனபால் தனக்கு பாத்தியம் இல்லாத சொத்தை

தனது மனைவிக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. எவ்வளவு பணம் கொடுத்து எனது மனைவியின் பெயரில் கிரையம் வாங்கினேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த கிரையத்திற்கு எனது மனைவி பணம் கொடுக்கவில்லை என்றாலும் நான் தான் பணம் கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. நான் பிரதிவாதிகளுக்கு எனது வழக்கறிஞா் மூலம் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு பின்னிட்டு செப்டாங்குளத்தில் ஊர் பஞ்சாயத்து மூலமாக பஞ்சாயத்து பேசப்பட்டதா என்றால் இல்லை. பிரதிவாதிகள் எனது வீட்டிற்கு தான் வந்தார்கள். சுந்தரம், அவரது மனைவி மற்றும் உறவினர்கள் வந்தார்கள். 2ம் பிரதிவாதி என்னிடம் வந்து எந்த பஞ்சாயத்தும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் அப்போது 1ம் பிரதிவாதியிடம் தவறுதலாக நான் அறிவிப்பு அனுப்பிவிட்டதாக கூறினேனா என்றால் இல்லை. நான் 2ம் பிரதிவாதி பேரில் தான் நடவடிக்கை எடுப்பதாக உள்ளேன் என்று குறிப்பிட்டேனா என்றால் இல்லை. பஞ்சாயத்து பேசியவர்களை அழைத்து விசாரித்தால் உண்மை தெரிந்துவிடும் என்றால் சரிதான். சுந்தரம் என்னிடம் கடன் எதுவும் பெறவில்லை என்றாலும் அவர் கடனுறுதி சீட்டு எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. தனபால் என்னிடம் வாங்கிய கடன் மற்றும் வட்டிக்கு தான் எனது மனைவி பெயரில் அவரது ஒரு பங்கினை கிரையமாக எழுதி கொடுத்தார். 1ம் பிரதிவாதி மின்சார துறையில் பணி புரியவில்லை என்றாலும் கூலி வேலை தான் செய்கிறார் என்றால் சரியல்ல. குணசேகரன் தனியார் நிறுவனத்தில் கும்மிடிப்பூண்டியில் பணிபுரிகிறார். டிராக்கடர் வாங்குவதற்கு 1, 2 பிரதிவாதிகள் வாங்கி சென்ற ரூ. 2,00,000/- கடனுக்கு இன்று வரை ரூ. 3,50,000/- வட்டி மட்டும் செலுத்தினார்க்ள் என்றால் சரியல்ல். அந்த அசல் ரூ. 2,00,000/- மும் வட்டி ரூ. 3,50,000/- சேர்த்து மொத்தம் ரூ. 5,50,000/- எனது மனைவியிடம் திருப்பி கொடுத்து விட்டார்க்ள் என்றால் இல்லை. எனது மனைவியை விசாரித்தால் அந்த உண்மை தெரியவரும் என்றால் சரியல்ல. நான் செப்டாங்குளத்தில் இருந்த போது 1ம் பிரதிவாதி தனக்கு குடும்ப அட்டை வேண்டும் என்று என்னிடம் கேட்டாரா என்றால் இல்லை. குடும்ப அட்டை வாங்கிதருவதாக கூறி 1ம் பிரதிவாதியிடம் வெற்றுத்தாளில் கையெழுத்து வாங்கினேன் என்றால் சரியல்ல. வெற்றுத்தாளில் பெற்ற கையெழுத்தை வைத்து கடனுறுதி சீட்டில் 1ம் பிரதிவாதியின் கையெழுத்தை போட்டு போர்ஜரியாக கடனுறுதி சீட்ஙட தயார் செய்தேன் என்றால் சரியல்ல. 9.9.2019 மற்றும் 10/12/2019 தேதிகளில் 1ம் பிரதிவாதி கொடுத்ததாக சொல்லும் கடனுறுதி சீட்டுகளை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவற்றை வைத்து தனியாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 5.09.2019 அன்று தனபால் ரூ. 8,00,000/- வாங்கியதாக நான் சொல்லும் கடனுக்கான கடனுறுதி சீட்ஙட நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு அது ஞாபகம் இல்லை. டிராக்டர்

வாங்குவதற்காக வாங்கிய ரூ. 2,00,000/- கடனை திருப்பி செலுத்திய உடன் எனக்கும் 1ம் பிரதிவாதிக்குமான பரிவர்தனைகள் அனைத்தும் முடிந்துவிட்டது என்றால் இல்லை. நான் போர்ஜரியாக உண்மைகளை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது வழக்குரையில் 5.9.2019 அன்று தனபால் ரூ. 8,00,000/- கடன் வாங்கியதாக குறிப்பிட்டுள்ளது எதற்காக கடன் வாங்கினார் என்றால் அவர் ஒரே நாளில் வாங்கவில்லை எனக்கும் அவருக்கும் பல கொடுக்கல் வாங்கல்கள் இருந்தது அதில் அது நின்றுபோன தொகையாகும். சில சமயங்களீல் பணம் கொடுக்கும் போதே கடனுறுதி சீட்டு எழுதி வாங்குவேன் சில சமயங்களில் பின்னிட்டும் எழுதி வாங்குவேன். நான் கடனுறுதி சீட்டை முழுமையாக பூர்த்தி செய்து தான் எழுதி வாங்குவேன். என் முன்பு தான் அவர்களே பூர்த்தி செய்து கையொப்பம் போடட்டு கொடுத்து கடன் வாங்குவார்கள். சாட்சி கையொப்பம் போட்டு தான் கடன் வாங்குவார்கள். என்னிடம் காட்டப்படும் வா.சா. 1 கடனுறுதி சீட்டு தாழம்பள்ளத்தில் எழுதிவாங்கியதாகும். முதல் சாட்சி வரதன் த/பெ வெங்கடேசன் ஆகும். வெங்கடேசன் சென்னாவரத்தை சார்ந்தவர். 2 வது சாட்சி தீபா க/பெ ரமேஷ் ஆகும். அவர் வந்தவாசியை சேர்ந்தவர். வரதனும் தீபாவும் எனது உறவினர்கள் ஆவர். வரதன் எனது அண்ணன் மகன் ஆவார். தீபா எனது மகள் ஆவார். கடனுறுதி சீட்டு எழுதப்பட்டால் பொதுவாக எழுதிகொடுப்பவர் தான் சாட்சிகளை அழைத்து வருவார்கள் என்றாலும் எனவே வா.சா. 1 போர்ஜரியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கும் தனபாலுக்கும் குணசேகரனுக்கும் மட்டுமே கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றாலும் 1ம் பிரதிவாதியிடம் இருந்து மோசடியாக அதிக பணம் பெறுவதற்காக போர்ஜரியாக தயாரிக்கப்பட்ட கடனுறுதி சீட்டின் பெயரில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளளேன் என்றால் சரியல்ல. வா.சா. 1 க்கும் 1ம் பிரதிவாதிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் அதில் உள்ள கையெழுத்து அவருடையது இல்லை என்றாலும் சரியல்ல எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

ஓம்/- எஸ்.சரண்யா
சார்பு நீதிபதி,
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.